மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் தமிழகத்தில் மட்டும்தான் 585 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை செயல்படுகிறது. அத்தகைய மிகப் பெரிய ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்து கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 306, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

306—

தொழில் பூங்கா

***41501—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் தோல் மற்றும் தோல் பொருட்களுக்கான தொழில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் தோல் மற்றும் தோல் பொருட்களுக்கான தொழிற்பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் வாலாஜா வட்டம் அருகிலே இருக்கிறது. அங்கே புதிதாக 973 ஏக்கரில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இராணிப்பேட்டை பகுதி–4 தொழிற்பூங்காவினை அமைக்கவிருக்கின்றது. அதில் தகுந்த

2014 ஆகஸ்ட் 1]

தொழில்முனைவோர் யாராவது முன்வருவார்களென்றால், அந்தத் தொழில் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசிலித்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பொருளாதாரம் என்பது தோல் மற்றும் தோல் பொருட்களைச் சார்ந்தது. ஆம்பூர் நகரில் மட்டும் 450 தோல் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதில் நேரடியாக 30,000 பேர் பணிபுரிகின்றனர்; மறைமுகமாக 10,000 பேர் பணிபுரிகின்றனர். ஆம்பூர் நகரில் மட்டும் தோல் பொருட்களின்மூலம் காலணிகள் செய்யக்கூடிய 180 தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதில் நேரடியாக 50,000 பேர் பணிபுரிகின்றனர்; மறைமுகமாக 15,000 பேர் பணிபுரிகின்றனர். வருடத்திற்கு தோல் தொழிற்சாலைகளில் மட்டும் 1,500 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் செய்யப்படுகிறது. தோல் பொருட்கள் தொழிற்சாலைகளில் 3,500 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் செய்யப்படுகிறது. ஏறத்தாழ வருடத்திற்கு 1,500 கோடி ரூபாய் அளவிற்கு அன்னியச் செலாவணியை தோல் பொருட்கள் மட்டும் நம்முடைய தேசத்திற்கு ஈட்டித் தருகின்றது. வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாயம் என்பது அறவே இல்லை. இத்தகைய சூழ்நிலையில், முழுக்க முழுக்க இந்தத் தொழிற்சாலைகளை மட்டுமே அந்த மாவட்டம் நம்பி இருக்கின்றது. இத்தகைய தொழில் பூங்காவை அமைக்கின்றபோது, அதற்கான allied products செய்யக்கூடிய நிறைய தொழிற்சாலைகள் அங்கே வரும். கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கும், வேலையில்லாத பட்டதாரிகளுக்கும் மற்றும் அனைவருக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கின்ற சூழல் அங்கே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசிலனை செய்து, ஆம்பூர் நகரில் தொழில் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2014 ஆகஸ்ட் 1

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இராணிப்பேட்டையில் அதுபோன்று* SEZ *ஆரம்பிக்கப்பட்டது. அங்கு தொழில்முனைவோர் யாரும் முன்வராத காரணத்தினால்தான், அந்த* SEZ, Engineering SEZ *ஆக மாற்றப்பட்டு இருக்கின்றது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொன்னதுபோல் அருகிலே இருக்கின்ற வாலாஜா பேட்டையில் புதிய தொழில் பூங்கா அமைக்க இருக்கின்றோம். அந்த* SEZ–*ல் தொழில்முனைவோர் யாரேனும் முன்வந்தால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலாஜாபேட்டை, இராணிப்பேட்டை பகுதிகளைப் பொறுத்தவரையிலே, ஆம்பூரைவிட மிக மிகக் குறைவான தோல் தொழிற்சாலைகள் அங்கே இருக்கின்ற காரணத்தால், அங்கே தோல் பொருட்கள் சம்பந்தமான தொழிற்சாலைகள் வருவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. ஆனால் ஆம்பூர், பேரணாம்பட்டு, வாணியம்பாடி ஆகிய மூன்று முக்கிய நகரங்களும் 15 கிலோ மீட்டருக்குள்ளாகவே இருக்கின்றன. இந்த மூன்று முக்கிய நகரங்களுடைய வருவாயும் தோல் தொழிற்சாலைகளை நம்பியே இருக்கின்றது. இராணிப்பேட்டை இங்கிருந்து 80 கிலோ மீட்டர் தூரமாக இருந்தாலும்கூட, அங்கே* Engineering *சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள்தான் அதிகமாக இருக்கின்றன. ஏனென்று சொன்னால்* BHEL *நிறுவனம் அங்கே இருக்கின்றது. அதன் காரணமாக,* Allied Industries *என்ற வகையில்* Engineering *சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள்தான் அங்கு இருக்கின்றன. ஆனால், நான் சொல்கின்ற ஆம்பூர், பேரணாம்பட்டு, வாணியம்பாடி பகுதிகளில் முழுக்க முழுக்க, நூற்றுக்கு நூறு சதவீதம் தோல் தொழிற்சாலைகள் மட்டுமே இருக்கின்ற*

காரணத்தினால், இந்தப் பகுதியிலே நீங்கள் தோல் தொழில் பூங்கா அமைத்தால், நிச்சயமாக நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு தொழில்முனைவோர்கள் வரக்கூடிய சூழ்நிலை இருக்கும். இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், இன்றைக்கு உத்தரப் பிரதேசத்தில், கான்பூரில் UP State Government இதை promote செய்திருக்கிறது. Leather Industrial Park தொடங்கும்போது, மத்திய அரசாங்கம் 50 சதவீதம் மானியம் கொடுக்கிறது. 50 சதவீதம் மத்திய அரசு மானியத்தில் 350 ஏக்கர் நிலத்தில் உத்தரப் பிரதேசத்தில், சாங்கியா என்ற பகுதியில் இதை promote செய்திருக்கிறார்கள். வேலூர் மாவட்டத்திலிருந்து ஒரு சில தொழிலதிபர்கள் அங்கே போய் சிறிய allied industries வைத்திருக்கிறார்கள். இந்த நிலை தொடராமல், நம்முடைய ஆம்பூர் பகுதியிலேயே தோல் தொழில் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் இன்னும் நிறைய பெருகவேண்டும்; முழுக்க முழுக்க சுற்றுப்புறப் பகுதிகளிலே உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கவேண்டும் என்பதற்காக, மீண்டும் பரிசீலனை செய்து இந்த இடத்திலே தோல் மற்றும் தோல் பொருட்களுக்கான தொழிற்பூங்காவை நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வேலூர் மாவட்டத்தில் விவசாயம் இல்லாத காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு, 4 புதிய தொழிற்பூங்காக்களை பனப்பாக்கம், காட்ராம்பாக்கம், சேக்காடு, அயப்பேடு போன்ற பகுதிகளில் அமைக்க இருக்கின்றது. இராணிப்பேட்டையில் ஏற்கெனவே தொழிற்பூங்கா இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆம்பூரிலே தோல் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன; அங்கே தோல் தொழில்பூங்கா அமைத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. முஹம்மத்ஜான் அவர்கள்.*

திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது இராணிப்பேட்டையைவிட ஆம்பூரில்தான் அதிகமாக தோல் தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். தோல் தொழிற்சாலையின் பிறப்பிடமே இராணிப்பேட்டைதான். ஆம்பூரில் வேண்டுமானால், ஆடு மற்றும் செம்மறியாடு தோல் சம்பந்தமான தொழில்கள் நடைபெறுகின்றன. ஆனால், இராணிப்பேட்டையில் மாட்டுத் தோலைப் பக்குவப்படுத்தி, அந்தத் தோல்மூலம் shoe தயாரிக்கப்பட்டு, அதிக அளவில் விற்பனை நடைபெறுகின்றன. எந்தவிதத்திலும் இராணிப்பேட்டை ஆம்பூருக்குச் சளைத்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் வாலாஜாபேட்டையைத் தேர்ந்தெடுத்து, அங்கு தொழில் பூங்காவை அமைக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை தயாரித்தது மிகவும் சாலச் சிறந்தது. அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உத்தரப் பிரதேசத்தைப்பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எந்தத் தொழிலைத் தொடங்கினாலும், 25 சதவீதம் DIC - District Industries Centre மூலம் மானியம் அளித்துக் கொண்டிருக்கின்றது. அது தோல் தொழிற்சாலைகளுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கின்றது. இராணிப்பேட்டையில் மிகப் பெரிய தோல் தொழிற்சாலைகளும், Shoe site-களும் ஆம்பூரைவிட அதிகமாக உள்ளன என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 307, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

307—

சொந்தக் கட்டடம்

***47163—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—